இடியும் மின்னலும்
இரையும் கடலும்
புயலும் பூகம்பம் ஆனதம்மா
இரவில் விடியும் பொழுதின் வடிவில் 2
புதிய உதயம் ஆடுதம்மா
இது அக்கிரம் அற்ர அணைக்கின்ற ஜாலம் அம்மா
அது ஆகும் வர அடங்காத தாகமம்மா 2

நஞ்சை கழுத்தினில் கட்டிய வேங்கை
பொங்கி புதுராகம் பாடுதம்மா
நெஞ்சில் நெருப்பினை மூட்டிய சத்தியம்
சன்னதம் கொண்டு இங்கு ஆடுதம்மா

இது அக்கிரம் அற்ற அடக்கிட யாகமம்மா
அது ஆகும் வர அடங்காத தாகமம்மா 2

மூன்று நூற்றாண்டை முடங்கி கிடந்த வீரம்
இன்று நெருப்பாய் மூண்டதம்மா
கும்பிட்டு கும்பிட்டு மண்டியிட்ட
தெய்வம் கொண்டேன் என்று விளையாடுதம்மா 2

இது அக்கிரம் அற்ற அடக்கிட யாகமம்மா
அது ஆகும் வர அடங்காத தாகமம்மா 2

ஏழையழுத கண்நீரில் கருவாகி
பிறந்தது இந்த குழந்தையம்மா 2
பச்ச ரத்தம் சிந்தி செத்தாலும்
இனி பிச்சைக்கழுவதும் இல்லையம்மா 2

இது அக்கிரம் அற்ற அடக்கிட யாகமம்மா
அது ஆகும் வர அடங்காத தாகமம்மா 2

சத்திய வேள்வியில் நித்தமும் குளித்திடும்
உத்தமர் சாவதும் இல்லையம்மா 2
வெற்றிக் கொடி தனை நாட்டும் வரை
உந்தன் புத்திரன் ஓய்வதும் இல்லையம்மா 2

இது அக்கிரம் அற்ற அடக்கிட யாகமம்மா
அது ஆகும் வர அடங்காத தாகமம்மா 2

இசைத்தட்டு . வெற்றி முரசு
பதிப்பகம் . அகம் கலையகம்